
# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”






மனுஷகுமாரன் பல பாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் (லூக்கா 9:22).

மன்னா – 9 ஏப்ரல் 2019 பிரதி – 1

## ஆயர் மடல்

பாவப்பரிகார பலியாய் இந்தப் பாரினில் தன்னையே தியாகப்பலியாக ஒப்புக்கொடுத்த அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிதான திருப்பெயரில் இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதிலும் கரம்பிடித்து வழிநடத்தின ஆண்டவருடைய பரிசுத்த நாமத்துக்கே மகிமை உண்டாவதாக.

### பிள்ளைகளின் கல்வி:-

நமது பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் மிக முக்கியமானவைகள். ஒரு கல்வியாண்டை நிறைவுசெய்து புதிய கல்வியாண்டுக்குள் நமது பிள்ளைகள் பிரவேசித்திருக்கிறார்கள். பிரவேசிக்கவும் இருக்கிறார்கள். வெற்றிக்காய் தேர்வு முடிவு எதிர்பார்த்து இருக்கும் பிள்ளைகளும் உண்டு. புதிதாக கல்வி சாலைக்கு செல்ல இருக்கும் பிள்ளைகளும் உண்டு. உயர்கல்விக்காய் ஆயத்தப்படுகிற பிள்ளைகளும் உண்டு. ஞானத்தின் உறைவிடமாகிய ஆண்டவரிடம் நம் பிள்ளைகளின் வாழ்வை ஒப்படைப்போம். அறிவுக்கூர்மையில் பிள்ளைகள் பெருகி நல்ல எதிர்காலம்பெற கர்த்தர் கிருபை செய்வாராக. கல்விக்கான பயணங்களின் பாதுகாப்பு, நல்ல நண்பர்களின் நட்பு, கடின உழைப்பு, விடாமுயற்சி நம் பிள்ளைகளில் பெருகட்டும்.

### லெந்துகாலம்:-

மார்ச் மாதம் 6-ம் தேதி முதல் பரிசுத்த லெந்து நாட்களை ஆசரிக்கிறோம். நமது ஆவிக்குரிய வாழ்வை குறித்த கரிசனையுடன் எஞ்சிய நாட்களிலும் செயல்படுவோம். இம்மாதம் 18-ம் தேதி புனித வியாழன் திருவிருந்து சிறப்புத்தொழுகை நடைபெறும். 19-ம் தேதி புனித வெள்ளியன்று சிலுவைமொழிகளின் திருதியானம் நடைபெறும். பக்திவிநயமாய் கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூருவோம். சுயஒறுப்பு உண்டியல் காணிக்கைகளை சிறப்புக்காணிக்கையாக கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவந்து கர்த்தரை கனப்படுத்துங்கள்.

### VBS 2019:-

இந்த ஆண்டுக்குரிய VBS மிகச்சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். 62 பிள்ளைகள், 11 ஆசிரியர்கள், 8 Volunteers மிகச் சிறப்பாக கலந்துகொண்டனர். VBS-ன் கன்வீனராக திருமதி. ஷீபா சுஜித் அவர்கள் எல்லா பணிகளையும் மிக நேர்த்தியாக திட்டமிட்டு, ஒவ்வொரு நாள் நிகழ்வையும் சிறப்பித்தார்கள். மனதார நன்றி கூறுகிறேன். கடினமாய் உழைத்த சபைக்குழு உறுப்பினர்கள், தாராளமாய் கொடுத்த இறைமக்கள், VBS சிறப்புற ஜெபித்த, கொடுத்த, செயல்பட்ட அனைவரையும் அன்புடன் நன்றிகூறி வாழ்த்துகிறேன்.

### பாலைவன மன்னா:-

நமது மாத பத்திரிகை ‘பாலைவன மன்னா’ எட்டு ஆண்டுகளை நிறைவுசெய்து 9-ஆவது ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கிறது. நம்து பிள்ளைகளுக்கான மற்றும் பெரியவர்களுக்கான பாலைவன மன்னா தேர்வு இந்த மாத இறுதியில் நடத்தப்படும். அனைவரும் ஆயத்தப்படும்படி அன்புடன் கேட்கிறேன். பாலைவன மன்னா தட்டச்சு செய்யும் திரு. பென்சாம் அவர்கள் குடும்பத்தையும், அவ்வப்போது தட்டச்சுப்பணியில் உதவிடும் திரு. சுஜித் கிளாட்சன் அவர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். அனைவரும் பாலைவன மன்னாவை வாசித்து பயனடைய அன்புடன் அழைக்கிறேன்.

இந்த மாதத்தில் 26-ம் தேதி பெண்கள் சங்க விற்பனைவிழா நடத்தப்பட இருக்கிறது. பெண்கள் சங்க உறுப்பினர்கள் உற்சாகமாய் ஆயத்தப்படும்படி கேட்கிறேன்.

அன்பர்களே! நமது ஆண்டவரின் சிலுவைப்பாடுகளையும், மகிமையான உயிர்த்தெழுதலையும் நினைவுகூர்ந்து நம்மை ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். வருகிற மே மாதத்திற்கு **“உழைப்பில் ஆசீர்வாதம்”** என்னும் தலைப்பில் உங்கள் படைப்புகளைத் தாருங்கள். கர்த்தர்தாமே இந்த புதிய மாதத்தையும் அவரது நன்மைகளினால் நிரப்பி நம்மை ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் போதகர்,**

**Rev. K. கிளாட்சன்**

## ஆயர் அருளுரை

## “சிலுவையும் உயிர்த்தெழுதலும்”

....இயேசு.....மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள். ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார் (மத்தேயு 17:22,23).

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினாலும், தேற்றரவாளனாகிய தூய ஆவியானவராலும் உங்கள் அனைவருக்கும் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. இந்த லெந்துகாலங்களில் பரிசுத்த வாழ்வு, பாவ மன்னிப்பின் நிச்சயம் போன்றவற்றை சிந்திப்பதோடு இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களையும், உயிர்த்தெழுதலையும் அதிகமாய் தியானிக்கவேண்டும்.

### 1. புதிய பலிபீடம்:

இன்று ‘சிலுவை’ என்று சொன்னதும் அது கிறிஸ்தவ சின்னம் என்று எல்லா மனிதர்களும் சொல்லிக்கொள்ளும்வண்ணமாகவே இருக்கிறது. ஏனென்றால் இந்த சிலுவைதான் கிறிஸ்து இயேசுவின் மரணத்திற்கு பயன்படுத்தப்பட்ட கொலைக்கருவி ஆகும். பொதுவாக தொடக்ககால திருச்சபையில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம் என்றே நற்செய்தி பறைசாற்றப்பட்டது. இதற்கு காரணம் இருந்தது. இந்த உலகம் துன்பம் என்றாலே அதனை சிலுவை என்று சொல்லி ஏற்க மறுக்கிறது. துன்பத்தை சாபம் என்று கூட சொல்வதுண்டு. எனவே இந்த சிலுவையும் சாபச்சின்னமாகவே மக்களுக்கு தெரிந்தது. ஆனால் சிலுவைத்துன்பத்தாலே மாத்திரமே கிறிஸ்து உலகை மீட்டார் என்பதால் சிலுவைக்கு புதிய விளக்கங்களைக் கொடுத்து நற்செய்தியை பறைசாற்றினர்.

வரலாற்றில் சிலுவை ஒரு அவமானத்தின் சின்னம், கொடூர மரண தண்டனையின் சின்னம். உலக வரலாற்றில் சிலுவை மரணம் என்பது மரணதண்டனைகளின் உச்சக்கட்ட அவமான தண்டனையாகவே கருதப்பட்டது. சிலுவையில் அறையப்பட்டு இறந்தவர்களின் உடல்களை அதிலேயே தொங்கவிட்டிருப்பர். அதை பறவைகள், எலிகள் போன்றவை தின்னும். கடைசியில் எலும்புகூடும் மண்டைஓடும் மட்டுமே மிஞ்சும். இந்த சூழலின்தான் இயேசுவும் சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் இயேசு கிறிஸ்துவின் சரீரம் பறவைகளுக்கு இரையாக்கப்படவில்லை என்பது நாம் அறிந்ததே. முழு உடலையும் சிலுவையில் அறையப்பட்ட கைகளே தாங்கும் என்பதால் மூச்சுதிணறலால் தாகச்சோர்பு ஏற்பட்டு வேதனையின் உச்சக்கட்டத்தை சிலுவையில் அறையப்பட்டவர்கள் அனுபவிப்பர். சாவுடன் போராடும் நிலை இது. இந்த பேராட்டமே கிறிஸ்து இயேசு சந்தித்த போராட்டம்.

கொலை கொள்ளையில் ஈடுபடுகிறவர்களும், தேசத்துரோக குற்றசெயல்களில் ஈடுபடுகிறவர்களுமே சிலுவையில் அறையப்படுவர். இயேசுவையும் ரோமானிய மன்னனுக்கு எதிராக தன்னை யூதரின் ராஜா எனக் கூறிக்கொண்டார் என்றக் குற்றச்சாட்டின் பெயரிலேயே சிலுவையில் அறைந்தனர். அவமான சின்னமான சிலுவை கிறிஸ்து இயேசுவின் சரீரத்தை சுமந்ததால் புனிதமாக்கப்பட்டுவிட்டது. புனிதச்சின்னமாக மாறிப்போனது. இதனால்தான் மேற்கத்திய நாடுகளின் வரலாற்றில் நடைபெற்ற உரிமைப்போர்களில் கூட சிலுவையை ஏந்தி போராடும் நிலைக்கூட வந்தது. அந்த அளவிற்கு அவமான சின்னம் புனித சின்னமாக கருதப்பட்டது.

இந்த புனித சிலுவையை நாம் "புதிய பலிபீடம்" என்றே அழைக்கவேண்டும். பலிபீடம் என்பது வழிபாடு சார்ந்தது. அதுபோல சிலுவையும் வழிபாடு சார்ந்தது. பலிபீடம் பாவங்களுக்கு பரிகாரமாக கடவுளுக்கு மனிதன் புறாக்குஞ்சுகளையோ, ஆட்டுக்குட்டிகளையோ, கடாக்களையோ, கொழுத்த கன்றுகளையோ பலிசெலுத்தும் இடமாக இருந்தது. சிலுவை புதிய பலியாகிய இயேசுவை பலிசெலுத்திய இடமாக இருக்கிறது. ஆசாரியர்கள் மூலமாக ஜனங்கள் பாவப்பரிகாரமாக பலிசெலுத்துவர். தாங்கள் செய்த தப்பிதங்களுக்கென குறிப்பாக பலிகள் செலுத்தப்படும். பலிப்பொருள்களாக படைக்கப்படும் உயிரினங்கள் குறையற்றதும், பழுதற்றதுமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவும் பாவக்குறையற்றவராகவும், பாவப்பழுதற்றவராகவும், பரிசுத்த பலிப்பொருளாகவே பலியாக்கப்பட்டார்.

கிறிஸ்து பரிசுத்த பலி. ஆதிமனிதனை கடவுள் உருவாக்கியபோது எவ்வளவு தூய்மையான முதல்படைப்பாக அவன் இருந்தானோ அந்த நிலையை மீண்டும் மனிதக்குலம் அடையவேண்டும் என்பதே கடவுளின் திட்டம். அதற்கு சாதாரண பலிப்பொருள்கள் ஈடாக இயலாது என்பதால் மாசற்ற பரிசுத்த பலியாக இயேசுநாதர் சிலுவையில் பலியாக்கப்பட்டார். எனவே அவரைப் பலிக்கொண்ட சிலுவையை புதிய பலிபீடம் என்றே சொல்லலாம். சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது (1கொரிந்தியர் 1:18).

## 2. புதிய வாழ்வு:-

சிலுவை மரணத்தை அனுபவித்த கிறிஸ்து நாதர் புதியவாழ்வின் தொடக்கமாக மாறினார். காலியான கல்லறைக்காட்சி மரித்துப்போன இயேசுவின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட வந்தவர்களுக்கு அதிர்ச்சியையே தந்தது. உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் என்று தேவதூதன் கூறிய வார்த்தை புதுவாழ்வுபெற்ற இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்தது. ஆனால் இதனை ஏற்கும் மனநிலை அவருக்கு நற்கந்தமிட சென்றவர்களுக்கு இல்லை. இயேசுவின் உடலை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவே மரியாள் கண்ணீர வடித்தாள். கண்ணீரைத் துடைக்கும் கிறிஸ்துவோ, ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்றார். அப்பொழுதும் அவள் அவரை அறிந்துகொள்ளவில்லை. என் ஆண்டவனை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்கு தெரியவில்லை என்று சொல்லி பின்னாக திரும்பி பார்க்கிறபொழுது இயேசுவை கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள் என்று யோவான் 20:14 கூறுகிறது. தோட்டக்காரர் என்றே அவள் நினைத்தாள். நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் என்றாள் மரியாள்.

இயேசுவோ மரியாளே என்று சொல்ல அவள் ரபூனி என்று அழைத்து அவரிடம் போனாள். ஆனால் என்னைத் தொடாதே நான் என் பிதாவினிடத்திற்கு இன்னும் ஏறிப்போகவில்லை என்று கூறி தனது புதிய வாழ்வைப்பற்றி கூறுகிறார்.

உயிர்த்தெழுதல் என்பது ஒரு புதிய வாழ்வு. இழந்த ஜீவனை இழந்த வாழ்வை மீண்டும் பெற்றுக்கொள்கிற அனுபவம். இயேசு கிறிஸ்துவால் முன்னறிவிக்கப்பட்டதுதான் உயிர்த்தெழுதல். அதனையே நாம் தியானவசனத்தில் பார்க்கிறோம். உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயரின் கூட்டமும் அன்றைய திருச்சபைத் தலைவர்களும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறைக்க திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவர்களால் அது கூடாமற்போயிற்று. தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர். அவர் செய்ய நினைத்த காரியம் ஒன்றும் தடைபடாது.

புதிய வாழ்வு தரும் ஆற்றலாக ஆண்டவர் செயல்பட தொடங்கினார். அதனை நாம் பேதுருவின் ஊழியத்தில் காண்கிறோம். தேவாலயத்தில் பிரசங்கிக்க செல்ல பேதுரு ஆயத்தமாகி போனபோது பிறவியிலேயே ஊனமுற்றவனான ஒருவன் பேதுருவிடம் பிச்சை கேட்டான். அவனுக்கு கொடுக்க ஒன்றுமில்லாதவர்கள்போல இருந்த பேதுரு, வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் உள்ளதை உன்னிடத்தில் தருகிறேன் என்றுச் சொல்லி "நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலே எழுந்து நட" என்று சொல்ல, முடவன் எழுந்து நின்று, குதித்து தேவனைத் துதித்து கொண்டிருந்ததாக வாசிக்கிறோம். உயிர்த்தெழுதலின் வல்லமை புதுவாழ்வின் ஆற்றலாக மாறியது. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதை அவர்களுக்கு தந்தருளுவார் என்று சொன்ன ஆண்டவரின் வார்த்தை உயிர்த்தெழுதல் மூலமாக புதிய வாழ்வாக வெளிப்படுகிறது.

அன்பிற்குரியவர்களே! சிலுவை புதிய பலிபீடமாக இருந்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியை பலிகொண்டது. சிலுவை வழியேதான் மீட்பு உலகிற்கு வந்தது. நமது பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார் என 1பேதுரு 2:24 கூறுகிறது. சிலுவையிலறையப்பட்ட மனிதன் எதுவும் செய்ய இயலாது. அதுபோல நாமும் நம் பாவங்களை சிலுவையில் அறைந்துவிட வேண்டும். பாவம் செய்கிற பழைய மனுஷன் சிலுவையிலறையப்படவேண்டும். நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் என ரோமர் 6:6 கூறுகிறது. நாம் நமது சிலுவையின் அனுபவம் எப்படிப்பட்டதென்பதைச் சிந்திப்போம்.

பாவத்துக்குச் செத்து நீதிக்கென்று உயிர்த்தெழுகின்ற புதிய வாழ்வை நாம் சுதந்தரித்துகொள்ளவேண்டும். சிலுவையும், உயிர்த்தெழுதலும் நமது ஆவிக்குரிய வாழ்வின் முக்கியமான நிபந்தனைகளாகும். பாவங்களை விட்டுவிட பாடுபடுதல் அவசியம். பாவத்தினால் மடிந்துபோகிற நமது ஆத்துமாவை பரிசுத்த வாழ்விற்காக உயிர்த்தெழச்செய்வது கிறிஸ்துவின் சிலுவை மரணமே. நமது அனைத்து பாவங்களையும் சிலுவையில் சுமந்துதீர்த்த ஆண்டவர் இயேசுவின் பாடுமரணங்களை நாம் இந்த நாட்களில் நினைவுகூருவோம். பாவத்துக்கு செத்து பரிசுத்தத்திற்காய் உயிர்த்தெழுகிற அனுபவம் ஆண்டவரின் பிள்ளைகளுக்கு மட்டுமே உண்டு. ஆண்டவரின் விருப்பம் நிறைவேற அவரது சித்தம் செய்ய நம்மை அவர் கரங்களில் அர்ப்பணம் செய்வோம். ஆண்டவர்தாமே சிலுவை வழி சம்பாதித்த இரட்சிப்பையும், உயிர்த்தெழுதலின் மூலமாய் வாக்குப்பண்ணியிருக்கிற நித்திய வாழ்வாகிய புதுவாழ்வையும் நம் ஒவ்வொருவருக்கும் தந்து ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் போதகர்**

# சிறுவர் பகுதி

## (சத்துருவின் சிறைகள்)

வேடனுடைய வேலை வேட்டையாடுவது என்பது நம் எல்லோருக்கும் தெரியும் அப்படித்தானே! அதுபோலவே வேடன் ஒருவன் வலையை எடுத்துக்கொண்டு மலைகள் அருகிலுள்ள புல்வெளி ஒன்றிற்கு சென்று வலைவிரித்து வைத்திருந்தான். அதில் நறுமணம் வீசும் வறுத்த நிலக்கடலைகளை போட்டு வைத்திருந்தான். அந்த வேளையில் ஒரு முயல் குடும்பம் அந்த நறுமணத்தினால் ஈர்க்கப்பட்டு, மணம் வீசும் பகுதிக்கு வந்தது. விரிக்கப்பட்டிருந்த வலையை பார்க்காமல் கடலையை சாப்பிட அருகில் சென்றது. ஆனால் அந்த குடும்பத்தின் அனைத்து முயல்களும் வலையில் சிக்கிக்கொண்டன. மாட்டிக்கொண்ட முயல் குடும்பத்தின் பெரிய ஆண் முயலையும், பெரிய பெண் முயலையும் பிடித்துக்கொண்டுபோய் வேடன் சமைத்துச் சாப்பிட்டுவிட்டான். 5 நடுத்தரக் குட்டி முயல்களையும் வளர்த்து பெரிதாக்கி சமைத்து சாப்பிட திட்டமிட்டான். பலகைகளால் கூடு ஒன்றை ஆயத்தப்படுத்தி அதற்குள் 5 குட்டிகளையும் அடைத்தான். நல்ல உணவு கொடுத்து கொழுகொழுவென வளர்த்து சீக்கிரத்தில் பெரிதாக்கி சாப்பிட்டுவிடவேண்டும் என நினைத்திருந்தான். கீரைகள், பச்சைக்காய்கறிகள், கிழங்குகள் என நல்ல உணவு, குட்டிகள் வேகமாக வளர்ந்தன. புஷ்டியாகவும் இருந்தது.

ஒரு குட்டி மட்டும் புஷ்டியாக வளர்ந்து வருகிற வேறு குட்டிகளை ஆச்சரியத்துடன் பார்ப்பதுபோல இருந்தது. அதன் பார்வையில் ஏதோ சந்தேகமிருப்பது போல இருந்தது. பெரிய முயல்களை கொண்டுபோன வேடன் அதை என்னச் செய்தானென்று தெரியவில்லை. காட்டில் கிடைக்கிற உணவை பறித்துகொண்டுவந்து நம்மை வளர்க்கிறானே - இதற்கு என்ன காரணம்? என யோசிப்பதுபோல இருந்தது அதன் பார்வை. வேறு குட்டிகளின் முகத்தை முத்தி நம்மை வேடன் எதற்காகவோ அடைத்து வைத்து வளர்க்கிறான். வெளியே விட்டுவிட்டால் நாமே நமக்கு தேவையான உணவை சாப்பிட்டுக்கொள்ளலாமே என சொல்வதுபோல இருந்தது. எப்பொழுது கூடு திறக்கப்பட்டாலும், தப்பிச்செல்ல வழி கிடைத்தாலும் ஓடிவிடுவோம் என்பதுபோல அது பிற குட்டிகளையும் பார்த்தது. வெளியே போகவும் வழி இருக்கிறதா? என நன்றாக கவனித்தது.

ஆனால் மற்ற முயல் குட்டிகள் கஷ்டமில்லாமல் கிடைக்கும் உணவை சாப்பிட்டு படுத்து உறங்கினால் போதும் என்பதுபோல சாப்பிடுவதும், உறங்குவதும் என நேரம் கழித்தது. அதில் ஒரு முயல் தப்பிக்கொள்வது நல்லது என நினைக்கிற முயலைப் பார்த்து, சாப்பிட்டோமா சந்தோஷமா தூங்கினோமா என்று இல்லாமல் ஏன் இது சந்தேகப்படுகிறது என பார்ப்பதுபோல இருந்தது. தப்பிச்செல்ல நினைக்கும் முயலை எல்லா முயல்களும் வெறித்து வெறித்துப் பார்க்க தொடங்கின. சுகமாக சாப்பிட்டு உடலை வளர்க்கத் தெரியாமல் சந்தோஷமே இல்லாமல் இந்த முயல் மட்டும் இப்படி இருக்கிறதே என்று அந்த முயலை ஏளனமாக பார்த்தது. ஆனால் அந்த முயலோ எப்போதாவது ஒருநாள் தப்பிக்க வழி கிடைக்கும் தப்பி ஓடி காட்டுக்குள் மறைந்துவிடவேண்டும் என்று சொல்வதுபோல எல்லா முயல்களையும் பார்த்தது. ஆனால் அந்த முயல்கள் இதை கண்டுகொள்ளவில்லை.

ஒருநாள் வந்தது. வேடனின் கூட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வாய்ப்பும் வந்தது. ஒருநாள் வேடன் கூட்டை சுத்தப்படுத்த தீர்மானித்தான். வேறு ஒரு உயரம் குறைந்த மேற்பக்கம் திறப்புடைய கூட்டில் எல்லா முயல்களையும் போட்டுவிட்டு கூட்டைச் சுத்தப்படுத்தினான். இதுதான் தருணம் தப்பித்து குதித்து ஓடிவிடுவோம் என்பதுபோல எல்லா முயல்களையும் பார்த்தது அந்த முயல். எதுவும் இதைக் கண்டு கொள்ளவில்லை. எனவே அந்த ஒரு முயல் மட்டும் கூட்டைவிட்டு குதித்து வெளியேறி காட்டுக்குள் மறைந்தது. மற்றவைகள் கொழுத்து வளர்ந்ததைப் பார்த்த வேடன் ஒவ்வொன்றாக பிடித்து

சமைத்துச் சாப்பிட்டான். எச்சரிக்கும் பார்வையுள்ள முயலின் பார்வையை பிற முயல்கள் அசட்டை செய்ததாலும், கிடைத்த சொகுசான உணவை பெரிதாக நினைத்ததாலும், தாங்கள் சிறைப்பட்டிருக்கிறோம் என்பதை உணராததாலும் அவைகள் உயிரை இழந்தன. ஆனால் விழிப்போடு இருந்த முயலோ தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. இதுபோலவே சாத்தானும் உலகத்தில் நமக்கு பல பாவ சந்தோஷங்களைத் தந்து நம்மை மகிழ்வுடன் வைத்திருப்பான். அதை உணராமல் இருந்தால் நாமும் ஆத்துமாவை சாத்தானின் விருப்பத்திற்கு ஏற்ப இழந்துவிடுவோம். எந்த இன்பத்திற்குள்ளும் சாத்தானின் கண்ணி இருக்கிறதா என்பதை கட்டாயமாக நாம் கவனிக்கவேண்டும். கர்த்தருக்குப் பிரியமாய் வாழவேண்டும்.

**சிந்தனை:- விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான். பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள். (நீதிமொழிகள் 27:12)**

**அன்புடன் போதகர்,**
**Rev. K. கிளாட்சன்**

## மகளிர் பகுதி

## நல் ஆலோசனை கொடுத்த பிலாத்துவின் மனைவி

.... நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்.... என்று சொல்ல சொன்னாள் (மத்தேயு 27:19).

பொதுவாக பெண்கள் தங்கள் இல்லங்களில் உணவு பதார்த்தங்களை சமைப்பதில் அதிக கரிசனை காட்டுகின்றனர். மேலும் வீட்டை சுத்தமாக வைத்திருப்பதும், ஆடைகளை சுத்தப்படுத்த துவைப்பதும், பிள்ளைகளுக்கு உணவூட்டுவதும், அவர்களுக்கு பாடங்களை கற்றுக்கொடுத்து மனனம் செய்யவைத்து கேள்வி கேட்பதும், பிள்ளைகளை பிறருடைய பிள்ளைகளை காட்டிலும் சிறப்பாக வளர்ப்பதும் மிக முக்கிய பணிகளாக பெண்களுக்கு முன் இருக்கிறது. வேலைக்குப்போகும் பெண்கள் குடும்ப பாரமும், பணியிடத்தில் வேலைப்பளுவும் சேர மிகவும் கடினபடுகின்றனர். மனைவி என்ற நிலையில் இருக்கும் பெண்கள் பணிச்சுமையைத் தாண்டி குடும்பத்துக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறவர்களாக, நல்ல ஆலோசனைக்காரர்களாகவும், ஜெபத்தினால் குடும்பத்தை கட்டுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். அதே நேரத்தில் ஏவாளைப்போல வஞ்சிக்கப்படுகிறவர்களும், சப்பீராளைப்போல தவறான உள்நோக்கத்தோடு தவறுசெய்யும் பெண்களும் நம் கிறிஸ்தவ சமூகத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அதிகாரம் தன் கையில் இருக்கிறதால் எதையும் செய்துவிடலாம் என நினைக்கிற சமுதாயத்தில் ‘‘அநீதி செய்யாதே’’ என்று தன் கணவனை எச்சரிக்கும் ஒரு பெண்மணியாக பிலாத்துவின் மனைவி குறிப்பிடப்படுகிறாள். பிலாத்துவின் மனைவியின் நற்செயல்பாடுகள் என்ன என்பதை இந்த தியானத்தின் மூலம் புரிந்துகொள்வோம்.

### 1. பிலாத்துவின் முன் இயேசு – ஜனங்களின் சதி:-

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தினால் ஏராளமான ஜனங்கள் வியாதியிலிருந்தும், தீய ஆவியின் கட்டுகளிலிருந்தும் விடுதலை பெற்றிருந்தாலும், பொறாமையும், துன்மார்க்கமும் நிறைந்த பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும், பரிசேயர்களும் இயேசுவை குற்றஞ்சாட்டி கொலைச்செய்யும்படி திட்டம்போட்டு செயல்பட்டனர். தேசாதிபதியான பொந்தியுபிலாத்துவிடம் கொண்டுவந்து நிறுத்தி தேவதூஷணம் சொன்னதாக குற்றஞ்சாட்டினர். சிலுவையில் அறைய உத்தரவிடும்படி கூச்சலிட்டனர். ஜனங்களையும்

கூக்குரலிடும்படி ஏவிவிட்டனர். ஏன் இப்பிடி பிரதான ஆசாரியர்கள் இயேசுவின் மேல் பழிசுமத்துகிறார்கள் என்றும் பிலாத்து அறிந்திருந்தார். இயேசுவுக்கு புகழ் கூடுகிறது என்ற பொறாமையினாலும், தங்கள் செல்வாக்கு குறைகிறது என்ற அச்சத்தினாலும் அவரை சிலுவையில் அறைந்து கொலைசெய்துவிட திட்டம் போட்டனர். இதனை பிலாத்துவின் மனைவியும் உற்று கவனித்துக்கொண்டே இருந்திருக்கிறாள். இயேசுவை குற்றப்படுத்துவது ஜனங்களின் சதிவேலை என்பதை தெளிவாக அடையாளம் கண்டுகொண்டாள்.

## 2. நீதி எது என்பதை உணர்ந்திருந்தாள்:-

வேதபாரகர்களும், பிரதான ஆசாரியர்களும் நீதி எது என்பதை அறிந்துணராமல் நடந்துகொள்கிறதை கவனித்தாள். பஸ்கா பண்டிகைதோறும் குற்றவாளிகளுக்கும் கருணைக் காட்டவேண்டும் என்ற யூதமரபு கடைபிடிக்கப்படுவதுண்டு. அதன்படி குற்றவாளி ஒருவரை விடுவிக்க அரசு முன்வரும். அந்த நேரத்தில் கொலை குற்றவாளியாக சிறையில் வைக்கப்பட்டுள்ள பரபாசை விடுதலைசெய்யவேண்டும் என்று பிரதான ஆசாரியர்களும் கேட்டனர், ஜனங்களையும் ஏவிவிட்டனர். ஆனால் அந்த நேரத்தை சரியான காரியத்தை, நீதியான காரியத்தை நிறைவேற்ற பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என பிலாத்துவின் மனைவி தீர்மானித்தாள். பிலாத்து கொலைக்குற்றவாளி பரபாசையா? அல்லது இயேசுவையா? யாரை நான் உங்களுக்கு விடுவிக்கவேண்டும் சொல்லுங்கள் என்று திரும்ப திரும்ப கேட்டான். ஜனங்கள் பரபாசை என்றே ஏகமாக கூக்குரலிட்டனர். ஆனால் அது நீதியல்ல என்பதை பிலாத்துவின் மனைவி அறிந்திருந்தாள். இயேசுவை விடுவிப்பதே நீதி என்பதை உணர்ந்திருந்தாள்.

## 3. நீதிக்காய் குரல் கொடுக்க தயங்கவில்லை:-

ஜனங்கள், வேதபாரகர்கள், மூப்பர்கள், பிரதான ஆசாரியர்கள் என எல்லோருமே ஏகமாக இயேசுவைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் பரபாசை விடுதலைச் செய்யும் என்று கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ன செய்வதென்று திகைத்துக்கொண்டிருந்தான் பிலாத்து. ஜனங்களைப் பிரியப்படுத்த பரபாசை விடுவிப்பதா? அல்லது இயேசுவை சிலுவையிலறைய ஒப்புக்கொடுப்பதா? என்பதே பிலாத்துவின் தடுமாற்றம். அந்த வேளையில் பிலாத்துவின் மனைவி குறுக்கிட தீர்மானித்தாள். பிலாத்து நியாயாசனத்தில் இருக்கும்போது ஆள் அனுப்பி, நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம். இயேசுவை விடுவியும் என்று சொல்லச் சொன்னாள். அதனைக் கேட்டதும் பிலாத்துவும் தன் மனைவியின் ஆலோசனைப்படியே இயேசுவை விடுவிக்க தீர்மானித்து யூத ஜனங்களோடு வாதிட்டான். ஏன் என்ன பொல்லாப்பு இயேசு செய்தார்? மரணத்துக்கேதுவான ஒரு குற்றமும் இயேசுவிடம் நான் காணவில்லை என்று கூறினான். ஆனால் அவன் முயற்சியில் தோற்றுப்போனவனாய் இயேசுவை ஒப்புக்கொடுத்தான்.

அன்பானவர்களே! நல் ஆலோசனை ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும். ஒரு சமூகத்தை தூக்கி நிறுத்தும். ஆனால் பிலாத்துவின் மனைவியின் நல் ஆலோசனை எடுபடாமல் போயிற்று. அதனால் யூத சமூகம் முழுவதும் இயேசுவின் இரத்தப்பழிக்கு காரணமாயினர். யார் கேட்டு செவிகொடுத்தாலும், கேட்டு செவிகொடுக்காவிட்டாலும் கவலைப்படவேண்டியதில்லை. நீதி எதுவோ, உண்மை எதுவோ அதை ஊக்கமாக, தைரியமாக எடுத்துச் சொல்வோம். ஆலோசனையாகவும் சொல்வோம். கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவர் மேலும் தமது கிருபையை விளங்கப்பண்ணுவாராக.

**அன்புடன் போதகர்,**
**Rev. K. கிளாட்சன்**

# மனிதர்களை தேடிய மாமனிதர்கள்

## சாது சுந்தர் சிங்

## சோதனையிலும் சாதிப்போம்

**மண்ணில்** : 03-09-1889
**ஊர்** : ராம்பூர், பஞ்சாப்
**நாடு** : இந்தியா
**தரிசன பூமி** : திபெத்

திபெத் நாடு. புத்த மதத்தை சார்ந்த மக்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கவோ, கேட்கவோ தடைசெய்யப்பட்ட இடம். மீறினால் கொடூரமான தண்டனை.

உள்ளத்தில் கிறிஸ்துவையும். கரங்களில் வேதாகமத்தையும் சுமந்து புறப்பட்டார் சாது சுந்தர் சிங். பிறப்பிலே அவர் ஒரு சீக்கியர் வளர்ப்பிலே மிகவும் சடங்காச்சாரங்களுடன் வளர்க்கப்பட்டவர்.

19 வயதிலே திபெத்தை நோக்கி சுவிசேஷத்தை சுமந்து சென்றார் சாது. திபெத் லாமாக்களால் அவர் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். அவ்விடத்திலிருந்து விரட்டப்பட்டார். துன்பங்களை இன்பமாக ஏற்றுக்கொண்டு மீண்டும் சுவிசேஷப்பணியைத் தொடர்ந்தார். அந்தோ! லாமாக்களின் தலைவனிடம் பிடிபட்டார். தண்டனையோ மிகவும் கொடூரம்.

பாழடைந்த கிணறு, தவறு செய்தவர்களை உள்ளேபோட்டு மூடிவிடுவார்கள். உடல் அழுகி சாகவேண்டியதுதான். சாது சுந்தர் சிங்குக்கும் இதே தண்டனை கொடுக்கப்பட்டது. உள்ளே விழுந்தவுடன் அவர் தோள்பட்டை உடைந்தது. அழுகிய பிணநாற்றத்தால் வயிறு குமட்டியது. எங்கு பார்த்தாலும் பிணங்கள். கிணற்றிற்குள்ளிருந்தே ஜெபிக்க ஆரம்பித்தார் சுந்தர்சிங். மூன்று நாட்களுக்குப்பின் ஓர் அதிசய மனிதரால் அக்கிணற்றுக் கதவு திறக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார். மீண்டும் தன் பணியைத் தொடர்ந்தார்.

திபெத், நேபாளம் மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலும் ஊழியம் செய்த இவர் எளிமையாகவும், இனிமையாகவும், உவமைகளாலும் போதிப்பதில் சிறந்தவர். இவரது நூல்கள் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஊன்றுகோல்கள்.

இரத்தம் சிந்தும் பாதங்களையுடைய அப்போஸ்தலன் என்றும், இந்திய அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டார் சாது சுந்தர் சிங்.

அன்பரே! கிறிஸ்துவிற்காக எவ்விதப் பாடுகளையும் சகிக்க ஆயத்தமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : வாலிபரே! விழித்தெழும்புங்கள்! பாவ ரோகத்தால் நசிந்துபோகும் ஆன்மாக்கள் எத்தனை என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! எத்தனை துன்பங்கள் வந்தாலும் உம்மில் நிலைத்திருக்க எனக்கு பெலன் தாரும்.

**தியானத்திற்கு : 2இராஜா. 8, புலம்பல் 4, 2கொரி. 1-2**

**(நன்றி: 365 மிஷனெரிகளின் வரலாறு)**

## பாடலின் பின்னணியம்

## எனக்காக நீ என்ன செய்தாய்?

எபிரெயர் 13 : 12,13
சங்கீதம் 116 : 12,13
யோசுவா 24 : 15

பாடல்: பிரகாஷ் ஏசுவடியான்
ராகம்: பிரகாஷ் ஏசுவடியான்

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயா?
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா?

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்?

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா?
ஊழியம் செய்ய வருவாயா? – உனக்காக

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போல்
மேய்கிறார் பாவப் புல்வெளியில்;
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுவாயா? – உனக்காக

4. "இயேசு என்றால் என்ன விலை?"
என்றே கேட்டிடும் எத்தனை பேர்;
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்,
ஜீவ அப்பம் கொடுப்பாயா? – உனக்காக

5. ஐந்து சகோதரர் அழிகின்றாரே,
யாரையாவது அனுப்பிடுமே!
யாரை நான் அனுப்பிடுவேன்?
யார் தான் போவார் எனக்காக? – உனக்காக

"எனக்காய் ஜீவன் விட்டவரே", என்ற பிரபல பாடலை இயற்றிய பிரகாஷ் ஏசுவடியான், மொத்தம் 13 பாடல்களையும் பல பல்லவிகளையும் எழுதியிருக்கிறார். அவற்றுள் இப்பாடலும், அனைவரும் விரும்பிப் பாடும் பாடலாக இருக்கிறது.

பிரகாஷ் வாலிபனாகத் தன் திருமண நாளை எதிர்நோக்கிக் கொண்டிருந்த நாட்களில், ஒரு சிறு அறுவை சிகிச்சைக்காக, நாகர்கோவிலில் உள்ள காத்தரின் பூத் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அந்த மருத்துவமனையில் உள்ள ஒவ்வொரு அறையிலும், ஒரு கிறிஸ்தவ வசனம் தொங்கவிடப்பட்டிருந்தது. பிரகாஷ் தங்கியிருந்த அறையில், இயேசுவின் சிலுவைக் காட்சியைச் சித்தரிக்கும் ஒரு படமும், அதற்க்கடியில், "இவை அனைத்தையும் நான் உனக்காகச் செய்தேன். எனக்காக நீ என்ன செய்தாய்?" என்ற வாசகமும் இருந்தது. பிரகாஷ் அங்கே தங்கியிருந்த ஒவ்வொரு நாளும், பலமுறை இவ்வாசகம் பிரகாஷிடம் சவால்விடுவது போலத் தோன்றியது.

தன் உள்ளத்தில் இக்கேள்வியினை உணர்ந்த பிரகாஷ் சிந்திக்கலானார். அச்சிந்தனை இப்பாடலாக உருவெடுத்தது. ஆவியானவரின் உந்துதலால் பாடலை எழுதும்போது, வார்த்தைகளை, அர்த்தம் மாறாதபடி, அப்படியே எழுதிய பிரகாஷின் பாடல்களில் எதுகை

மோனைக் குறைகள் உண்டு. ஆனால், அவற்றின் மையக்கருத்து சிறிதளவும் குறைய அவர் விடுவதில்லை.

பின்னர், 1969–ம் ஆண்டு திருமணம் செய்த பிரகாஷ், இப்பாடலின் சவாலுக்குத் தன்னை மட்டுமல்ல, தன் குடும்பம் அனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்டார் என்றால் அது மிகையாகாது. ஏனெனில், இன்றும், அவர் மட்டுமின்றி, அவரது குடும்பத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும். தங்கள் வாழ்க்கையை ஆண்டவரின் பணிக்கென அர்ப்பணித்து, ஊழியத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

பிரகாஷின் அர்ப்பண ஊழியங்களைப் பாராட்டும் வகையில், கடந்த 26-09-1998. அன்று, இந்திய வேதாகமக் கல்லூரி, ஆசிய இறையியல் ஐக்கியத்தின் சார்பில் அறிவர் பட்டமளித்து அவரைக் கௌரவித்தது.

இப்பாடலைக் கேட்டு அனுபவிக்கும் நாமும், தேவன் நமக்கு அளிக்கும் இச்சவாலை மேற்கொண்டு, யோசுவாவைப் போல அவருக்காகச் சேவை செய்ய குடும்பமாக அர்ப்பணம் செய்வோமா?

**பாடகர் குழு – CSI Tamil Church – Oman** **(நன்றி – அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## விடுமுறை வேதாகம பள்ளி – 2019

சிறுபிள்ளைகளை அதிகமாய் நேசிக்கிற எம்பெருமான் இயேசு கிறிஸ்துவுக்கு துதி ஸ்தோத்திரங்களை செலுத்தி 2019 ஆண்டிற்கான விடுமுறை வேதாகமபள்ளி அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டு VBS-ன் நோக்கம் **"கவனமாயிரு"** என்பதாகும். நோக்க வசனம் "ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" (எபேசியர் 5:15,16).

திட்டமிட்டபடி கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த ஆண்டு VBS 22-03-2019 வெள்ளி ஆராதனையில் போதகரின் நோக்க அறிமுகத்துடன் ஆரம்பமானது. 23-03-2019 முதல் 28-03-2019 வரை ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்த ஆண்டில் VBS Convener-ஆக Mrs. Sheeba Sujith அவர்களும், Volunteers ஆக Mrs. Sathya Priya Ramesh, Mrs. Priyadarshini Kanagavel, Mrs. Regin Justa Vinolin, Mrs. Divya Darling Kasiraja, Mr. Austin Daniel, Mrs. Selva Angel Mohanbabu, Mrs. Shiney Johan, Mr. Jerin ஆகியோர் மிக சிறப்பாக செயல்பட்டனர்.

62 பிள்ளைகள் கலந்துகொண்டனர். பிள்ளைகளுக்கு Badge, பாடல் புத்தகம், கைவேலை பாடப்புத்தகம் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது.

ஆசிரியைகளாக Mrs. Sarah Rajasingh, Mrs. Boopathi Baskar, Mrs. Thamari Johnson, Mrs. Eben Silviya Ennesar Jesupaul, Mrs. Percy Jean, Mrs. Gracelin Rani Bensam, Mrs. Golden Irene Sheeja Robin, Mrs. Nisha Rajan, Mrs. Jancy Victor, Mrs. Virgin Jegatha Jino, Mrs. Sapthika Jerry ஆகியோர் சிறப்பாக செயல்பட்டனர்.

பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்விதமாக சிற்றுண்டி வழங்கப்பட்டது. 27-03-2019 அன்று Inspection day ஆசரிக்கப்பட்டது. VBS சிறப்பு காணிக்கை கவர் கொடுக்கப்பட்டு சிறப்பு

காணிக்கை பெறப்பட்டது. 28-ஆம் தேதி அன்பின் விருந்துநாள் ஆசரிக்கப்பட்டது. VBS-ல் கலந்துகொண்ட பிள்ளைகளுக்கான பரிசும், பரிசோதனைநாள் பரிசும் வழங்கப்பட்டது. பிள்ளைகளுடைய நிகழ்ச்சிகளுடன் 29-ம் தேதி நிறைவுத்தொழுகை சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆண்டின் VBS சிறப்பாக நடைபெற நல்ஆலோசனைகளைத் தந்தும் பாடல்களைக் கற்றுக்கொடுத்தும் VBS-ஐ சிறப்பித்த நம் போதகர் Rev. K. Gladston அவர்களுக்கும், குறுநாடகம், மிஷனெரி கதை, பாடல்களுக்கான செய்கைகளைக் கற்றுக்கொடுத்த Volunteers-க்கும், ஆர்வமாய் பங்கேற்ற ஆசிரியர்களுக்கும், கலந்துகொண்ட அனைத்து பிள்ளைகளுக்கும், பக்கபலமாய் நின்று செயல்பட்ட சபைக்குழுவுக்கும், VBS-ன் தேவைகளுக்கு தாராளமாய் கொடுத்த Sponsors-க்கும், வாகனங்களில் பிள்ளைகளை அழைத்துவந்த அன்பர்களுக்கும், ஒவ்வொரு நாளின் நிகழ்வுகளிலும் ஆதரவும், உதவியும் செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறேன்.

கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் மகிழ்ந்திருக்கிறோம் என்ற வசனத்தின்படி நம்மை மகிழ்வுடன் நடத்துகின்ற நம் ஆண்டவரைப்போற்றி இவ்வறிக்கையை சமர்ப்பிக்கிறேன். நன்றி!

**திருமதி. ஷீபா சுஜித்**
**VBS Convener**

## மார்ச் மாத பெண்கள் சங்க அறிக்கை

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

மார்ச் மாத பெண்கள் சங்க கூடுகை மார்ச் மாதம் 21-ம் தேதி CSI மலையாளம் ஹாலில் வைத்து இரவு 9:20 மணியளவில் திருமதி. ஜெகதா ஜினோ அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஆவிக்குரிய பாடல்கள் உற்சாகமாக பாடி ஸ்தோத்திர ஜெபம் திருமதி. பூபதி பாஸ்கர் அவர்களால் ஏறெடுக்கப்பட்டது.

அதன்பின் திருமறைப்பாடமாக மத்தேயு 26:1-13 வசனங்கள் வாசிக்கப்பட்டது. பின்னர் **திருமதி. கிரேஸ்லின் ராணி பென்சாம்** அவர்கள் **“இயேசுவின் பாடுமரணத்தில் பெண்களின் பங்கு”** என்ற தலைப்பில் கீழ்கண்ட பெண்களின் பங்கை பற்றி விவரித்து கூறினார்கள்.

1. நற்கிரியை செய்த மரியாள்
2. புலம்பி அழுத ஸ்திரீகள்
3. ஏற்ற நேரத்தில் நல்ல ஆலோசனை சொன்ன பிலாத்துவின் மனைவி
4. சிலுவையண்டை நின்ற ஸ்திரீகள்
5. அடக்கம் செய்த கல்லறைக்கு சென்ற பெண்கள்
6. சுகந்தவர்க்கமிட கல்லறைக்கு சென்ற ஸ்திரீகள்
7. உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனம் பெற்று செய்தி அறிவித்த ஸ்திரீ

மேலும் சில சீஷர்கள், மற்றும் சிலரின் பங்கைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் திருமதி. நிஷா புருஸ்வெல்ட் அவர்கள் ஜெபக்குறிப்புகளைப் பகிர்ந்துகொள்ள அந்த குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதன்பின்பு

சாட்சிவேளையில் பலர் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தும் ஜெபக்குறிப்புகளை பகிர்ந்துகொண்டார்கள். அதைத் தொடர்ந்து நிறைவு ஜெபமாக திருமதி. நிஷா ராஜன் சாட்சி சொன்னவர்களுக்காகவும், ஜெபக்குறிப்பு சொன்னவர்களுக்காகவும், Sponsor செய்தவர்களுக்காகவும் மற்றும் கலந்துகொண்ட அனைவருக்காகவும் ஜெபம் ஏறெடுத்தார்கள். பெண்கள் சங்கமானது 11:25 மணிக்கு இனிதே நிறைவுப்பெற்றது.

இறுதியில் Sponsor செய்த **திருமதி. நிஷா புருஸ்வெல்ட்** மற்றும் **திருமதி. பிரியா ரமேஷ்** சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிவரும் நாட்களில் பெண்களாகிய நாம் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலாளர்**

## மார்ச் மாத ஆண்கள் சங்க அறிக்கை

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவரின் மட்டில்லாத கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 21-03-2019 அன்று இரவு 9 மணிக்கு போதகர் ஜெபத்துடன் விசுவாசத்தோடு ஆரம்பமானது. சங்க உறுப்பினர்களும், புதியதாக வந்தவர்களும் ஆவிக்குரிய பாடல்களை உற்சாகமாக பாடினார்கள். பின்னர் கடந்த நாட்களில் கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன் பின்னர் யோபு அதிகாரம் 2 முழுவதும் வாசிக்கப்பட்டது. **திரு. சைலஸ்** அவர்கள் **“இறை விசுவாசத்தின் ஊற்று”** என்ற தலைப்பில் இறைசெய்தி கொடுத்தார்கள். அதில் யோபு 2:3-ன் படி தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகி செல்லும்படி அறைகூவல் விடுக்கப்பட்டது. யாக்கோபு 5:15-ன் படி பிணியாளிக்காக ஜெபிக்கும்போது எப்பேர்பட்ட பாவம் செய்தவனாக இருந்தாலும் அவன் ரட்சிக்கப்படுவான் என்று விசுவாசத்தின் அனலை மூட்டினார். மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

சாட்சி வேளையில் சகோதரர்கள் தங்கள் விடுதலையின் சாட்சியை கூறினார்கள். பின்னர் அவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இறுதியாக ஒருமனப்பட்டவர்களாக எழுந்துநின்று எல்லா குடும்பத்திற்காகவும், எல்லா தேவைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. முடிவில் போதகர் ஆசியுடன் 11 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது. கலந்து கொண்ட விசுவாசிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர் உங்களையும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

கூடுகையை தாங்கிய **திரு. தன்ராஜ்** மற்றும் **திரு. சந்தோஷ்** அவர்களுக்கும், அனைவருக்கும் இரவு உணவு வழங்கிய **திரு. V.N. ராஜன்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பிற்குரிய திருச்சபை விசுவாசிகளே! திருச்சபையின் ஆண்கள் அனைவரும் சங்க கூடுகையில் கலந்துகொண்டு தேவஆசீர்வாதம் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## ஏப்ரல் மாத வேதபாடங்கள் வாசிப்பவர்கள் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| 05-04-2019 | ஆதியாகமம் 26:12-33 | Mrs. Gracelin Rani Bensam |
| | மாற்கு 10:46-52 | Mr. Vinolin |
| 12-04-2019 | **குருத்தோலை தினம்** | |
| | சகரியா 9:1-12 | Mrs. Jesi Kala |
| | லூக்கா 19:29-40 | Mr. Victor Thayasingh |
| 18-04-2019 | **வியாகுல வியாழன்** | |
| | லூக்கா 22:39-53 | Mrs. Jancy Deepa |
| | யாத்திராகமம் 12:3-14 | C. A. Vinu |
| 19-04-2018 | **புனித வெள்ளி** | |

| | | |
|---|---|---|
| 1-ம் சிலுவை வசனம் | லூக்கா 23:32–38 | Miss. Jerlin Stelina J. |
| 2-ம் சிலுவை வசனம் | லூக்கா 23:39–43 | Miss. Johanna Shirly V. |
| 3-ம் சிலுவை வசனம் | யோவான் 19:23–27 | Miss. Britny Pearzlint J. |
| 4-ம் சிலுவை வசனம் | மத்தேயு 27:45-49 | Miss. Aksha Judith Cynthia B. |
| 5-ம் சிலுவை வசனம் | யோவான் 19:28–29 | Miss. Jovita V. |
| 6-ம் சிலுவை வசனம் | யோவான் 19:30–31 | Miss. Shiny Persia P. |
| 7-ம் சிலுவை வசனம் | லூக்கா 23:44–46 | Miss. Agnes Yarona K. |

| | | |
|---|---|---|
| 21-04-2019 | **உயிர்த்தெழுதல்** | |
| | 2சாமுவேல் 22:1-20 | Mrs. Jeya Victor |
| | மாற்கு 16:1-11 | Mr. Vimal Kumar |
| 26-04-2019 | ஆதியாகமம் 28:10-22 | Mrs. Mahizha Jenkin |
| | யோவான் 20:11-18 | Mr. Victor Johnslin |
| 03-05-2019 | 2நாளாகமம் 34:29-33 | Mrs. Nisha Broosewelt |
| | லூக்கா 24:13-27 | Mr. Vinobha |

## உயிர்த்தெழுதலின் வல்லமை
**(பிலிப்பியர் 3:10,11)**

உயிர்த்தெழுதலின் வல்லமை! ஆம் அது எல்லா வல்லமையிலும் பெரிய வல்லமை. மரித்த சரீரத்துக்குள் பரிசுத்த ஆவியானவரை பலமாய் கொண்டுவரும் வல்லமை. இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய வல்லமை. கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமே உயிர்த்தெழுதலில்தான் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் அந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்து அதற்காக எந்த தியாகமும் செய்ய முன்வந்தார். உயிர்த்தெழுதலின் வல்லமையை அறியும்படி எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன் என்று தியாகம் செய்தார். அரபு தேசத்திற்கு சென்று மூன்றரை ஆண்டுகாலம் கிறிஸ்துவோடு தனித்திருந்து உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பற்றிய தேவ இரகசியங்களை ஆராயும்படி தன் இருதயத்தைத் திருப்பினார்.

உலகில் பல்வேறு வல்லமைகள் உண்டு. ஆனால் உயிர்த்தெழுதலின் வல்லமையோ மற்ற

எல்லாவற்றையும் மேற்கொள்ளுகிற வல்லமையாகும்.

சாதாரணமாய் உயிர்ப்பிக்கப்படுவது வேறு. உயிர்த்தெழுதலின் வல்லமையினால் என்றென்றும் ஜீவித்திருப்பது வேறு. சாரிபாத் விதவையினுடைய மகன் எலியாவினால் உயிரோடு எழுப்பப்பட்டான். சூனேமியாளின் மகன் எலிசாவினால் எழுப்பப்பட்டான். ஐத்திகு என்ற வாலிபன் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் எழுப்பப்பட்டான். தொற்காள் என்ற வயத முதிர்ந்த பெண்மணி பேதுருவினால் எழுப்பப்பட்டாள். இவர்களெல்லாரும் மீண்டும் மரித்தார்கள்.

இன்றைக்கும் "மரித்தோரை எழுப்புங்கள்" என்ற இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளையின்படி (மத்தேயு 10:8) சுவிசேஷத்தினிமித்தம் மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள். மரித்த பால்யாங்கி சோ-வின் 2-வது மகன் உயிரோடு எழுந்தான். ஸ்மித் விகிள்ஸ்வொர்த் என்ற தேவ மனிதர் 23 பேரை உயிரோடு எழுப்பினார். இந்தோனேஷியாவில் மெல்டாரி என்ற பக்தன் மரித்து 10 நாட்களாகி நாறி கிடந்த பிரேதத்தை எழுப்பினார்.

விசுவாச வரம், அற்புதங்களைச் செய்கிற வரம், சுகமளிக்கும் வரமாகிய மூன்று வரங்களும் இணைந்து செயல்பட்டால் மரித்தோரை நிச்சயமாய் எழுப்பமுடியும். ஆனால் அப்படி எழுப்பப்பட்டவர்கள் மீண்டும் மரிக்கிறார்கள். "மரணத்தை காணாமல் உயிரோடிருப்பவன் யார்?" (சங்கீதம் 89:48).

ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையானது முற்றிலும் வித்தியாசமானது. அது மறுரூபமாக்கப்பட்ட சரீரத்தை நமக்குள் கொண்டுவருகிறது. அழியாத, வாடாத மகிமையான நிரந்தரமான விண்ணுக்குரிய சரீரத்தைப் பெற்றுத் தருகிறது.

கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுந்த வல்லமையை நாம் அறியும்போது "எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாக வேண்டுமே" என்ற எண்ணமும் ஏக்கமும் வருகிறது (பிலிப்பியர் 3:10).

பழங்காலத்து எகிப்து மன்னர்கள் கடைசி கால உயிர்த்தெழுதலை நம்பினார்கள். தங்களுக்கு கல்லறையாக பெரிய பிரமிடுகளை கட்டினார்கள். முதல் பிரமிடுவை 1,20,000 தொழிலாளர்கள் இரவும் பகலுமாக 35 ஆண்டுகள் பாடுபட்டு கட்டினார்கள். அதில் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கற்களும் 2 டன் எடைக்கு மேற்பட்டவை. அதற்குள் ராஜாக்களின் சரீரம் பக்குவப்படுத்தப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

ஒரு பிரமிடை தோண்டியபோது அங்கு ஏராளமான உணவுபொருட்களும், கோதுமையும் பாதுகாப்பாக கெட்டுப்போகாமல் வைக்கப்பட்டிருந்தது. உயிர்த்தெழுந்து வரும்போது அவர்களுக்கு உணவு தேவை என எண்ணி வைத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 3000 ஆண்டுகள் உள்ளே இருந்த அந்த கோதுமை மணிகளை விதைத்தபோது அவை அருமையாய் முளைத்து எழும்பின. நமக்குள்ளே கிறிஸ்துவாகிய ஜீவன் இருப்பாரானால் எக்காள சத்தம் தொனிக்கும்போது நாம் உயிர்த்தெழுவோம், மறுரூபமாக்கப்படுவோம்.

இயேசுவின் கல்லறையில் உயிர்த்தெழுதலின் வல்லமை பலமாய் இறங்கியபோது எருசலேம் பட்டணமே அதிர ஆரம்பித்தது (மத்தேயு 27:52,53).

ஒரு இடத்தில் அணுகுண்டு விழுமானால் விழுந்த இடத்தில் மட்டுமல்ல எத்தனையோ மைல் தூரத்திலுள்ள கட்டடங்களும் நொறுங்கிவிழும். அதுபோலவே கிறிஸ்துவின் கல்லறைக்குள் தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமை இறங்கியபோது அநேக கல்லறைகள் திறந்து அநேக பரிசுத்தவான்களையும் எழுப்பிவிட்டது.

யோபு பக்தன் எழுதுகிறார்; "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்

முதலானவை அழுகிபோனபின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனை பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும் (யோபு 19:25-27).

உயிர்த்தெழுதலின் வல்லமை மரித்தோர் மட்டுமல்ல, உயிரோடிருக்கிறவர்கள் மேலும் பலமாய் இறங்கும் (1கொரிந்தியர் 15:51,52).

கடைசி காலம், கடைசி நேரம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கிற நாமும் மறுரூபமாக்கப்படுவோம். ஆகவே சரீரத்தினாலும்டு, உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1கொரிந்தியர் 6:20). ஆமென்

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## ஜெபக்குறிப்புகள்

**“நான் கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன். அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்கு செவிகொடுத்தார்” – சங்கீதம் 3:4**

அன்பிற்கினிய இறைமக்களே!

இந்த ஆண்டில் நாம் வளர்ந்து பெருக நமக்கு மிகவும் தேவை ஜெபவாழ்வு. ஜெபவாழ்வே ஜெயவாழ்வாக அமையும். ஜெபமில்லா கிறிஸ்தவ வாழ்வு மழையில்லா பாலைவனம் போலாகிவிடும். கடவுளோடு நமது அன்பை பெருக்கிகொள்ள நாம் தனி ஜெபம், குடும்ப ஜெபம், கூட்டு ஜெபம் ஏறெடுக்கவேண்டும். திருச்சபையில் நடக்கும் உபவாச ஜெபம், சிறப்பு இரவு ஜெபம் இவைகளை புறக்கணியாமல் கலந்துகொள்வது ஆசீர்வாதமான அனுபவமாகும்.

### எப்படி ஜெபிப்பது?

1. அனுதினமும் நம்மை நிதானித்து ஆராய்ந்து நமது குற்றங்களையும், குறைகளையும் ஆண்டவரிடம் **பாவ அறிக்கை** செய்து இறையன்பில் நம்மை நாம் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

2. அனுதினமும் குறிப்பாக இரவில் தூங்கசெல்லும் முன்பு இன்று கர்த்தர் என்ன நன்மையெல்லாம் செய்திருக்கிறார் என்பதை நினைவில் கொண்டுவந்து **நன்றி செலுத்துவது** அவசியமானதாகும்.

3. கடவுளுடைய மகத்துவமான நாமத்தை சொல்லி நாம் அவரை மகிமைப்படுத்தவேண்டும். தூதர்களால் போற்றப்படும் ஆண்டவரை நாம் போற்றுவதற்கு தகுதியற்றவர்கள். ஆனாலும் நம் துதிபலிகளை ஏற்று அவர் மகிழ்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனை நாம் மனதார **மகிமைப்படுத்தவேண்டும்.**

4. ஒவ்வொரு நாளும் பல எதிர்பார்ப்புகள் நமக்கு இருக்கும், தேவைகள் இருக்கும், இலட்சியங்கள் இருக்கும். இவற்றிற்காக நாம் **வேண்டுதல் செய்யவேண்டும்.** நிறைவேறாத காரியங்கள் என சில காரியங்கள் இருக்கலாம். அதற்காக உபவாசித்தும் வேண்டுதல் செய்யலாம்.

5. உலக ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்பது மட்டும் போதாது. நமது ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்காக நாம் வேண்டுதல் செய்யவேண்டும். நாம் இன்று பரிசுத்தமாய் வாழவேண்டும், பாவங்களை மேற்கொள்ளவேண்டும். பாவச்சோதனைகளை

அடையாளம் காணவேண்டும் என்ற ஆவலை வளர்த்துகொள்ளவேண்டும். நம் மனதில் நினைவுக்கு வரும் தீய கெட்ட பழக்கவழக்கங்களை விட்டுவிட இன்றே தீர்மானிக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர்தான் தீயதை விட்டுவிடும் பெலனை நமக்குத் தருவார். எனவே **நமது பரிசுத்த வாழ்வுக்காக மன்றாடவேண்டும்.**

பாவ அறிக்கை, நன்றி செலுத்துதல், ஆண்டவரை மகிமைப்படுத்துதல், வேண்டுதல், மன்றாடுதல், என்ற 5 நிலைகளில் நமது ஜெபம் அமைவது நல்லது.

## திருச்சபைக்காக ஜெபிக்க:-

- திருச்சபை நல்ல வளர்ச்சி பெற்றிட ஜெபிப்போம்.
- நம் போதகருக்காகவும், முன்னாள் போதகர்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- கிளைச்சங்கங்கள் புது வளர்ச்சிப்பெற ஜெபிப்போம்.
- ஆராதனைகள் ஆசீர்வாதமாய் அமையவும், இன்னும் பலர் நம்மோடு ஆண்டவரை ஆராதிக்க இணைந்திடவும் ஜெபிப்போம்.
- திருப்பணிகளைத் தன்னார்வமாய் தாங்குவோர் பெருகவும், இறைநாம மகிமைக்காக செயல்படுவோர் ஆசிபெறவும் ஜெபிப்போம்.
- நமது சொந்த திருச்சபைகளுக்காக ஜெபிப்போம்.
- நமது பேராயத்திற்கு நல்ல தலைமை தேவை. பேராயர் தேர்தல் நடத்தப்படவும், பேராயர் தெரிவுசெய்யப்படவும் ஜெபிப்போம்.
- எல்லா பேராயங்களுக்காகவும், திருச்சபைக்காகவும், பிரதம பேராயர், பேராயர்கள், குருவானவர்கள், சுவிசேஷகர்கள், உபதேசிகர்கள் இவர்கள் அனைவருக்காகவும் திருப்பணி வளரவும் ஜெபிப்போம்.
- இந்திய தேசத்தின் திருச்சபைகள் சந்தித்து வரும் துன்புறுத்தல்கள் நீங்கவும், துன்புறுத்துவோர் இறைவனால் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.
- நமது சபையால் தாங்கப்படும் 11 மிஷனெரிகளுக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், எல்லாவிதமான திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- புதிய ஆண்டில் கர்த்தருடைய ஆசீர்வாதம் நம் குடும்பங்களை வந்தடைய ஜெபிப்போம்.
- எல்லா குடும்பங்களிலும் சமாதானம், சந்தோஷம் பெருக ஜெபிப்போம்.
- கும்பங்களில் சண்டை, கருத்து வேறுபாடு, பிரிவினை உணர்வு ஏற்படாதபடி காக்கப்பட ஜெபிப்போம்.
- குடும்ப அங்கத்தினர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்காக ஜெபிப்போம்.
- கடன் பிரச்சனை, பணிசார்ந்த பிரச்சனைகள், வியாதிகளினால் ஏற்படும் கஷ்டம் நீங்க ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கும் சகோதரிகளின் குழந்தைப்பேற்றிற்காகவும், குழந்தை செல்வம் எதிர்பார்த்திருக்கும் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.
- தீய பழக்கவழக்கங்களிலிருப்போரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

**தேசத்துக்காக ஜெபிக்க:-**

- நமது இந்திய நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், அதிகாரிகள், தேசத்திற்கு நல்லாட்சி தந்திட ஜெபிப்போம்.
- தமிழ்நாட்டின் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், அதிகாரிகள் மாநில வளர்ச்சிக்காய் நல்ல முறையில் செயல்பட ஜெபிப்போம்.
- ஓமான் நாட்டிற்காகவும், நாட்டின் சுல்தான் மற்றும் ஆளுகை செய்கிறவர்களின் சிறப்பான ஆட்சிக்காக ஜெபிப்போம்.
- உலக நாடுகளின் சமாதானத்திற்காகவும், சுவிசேஷம் எல்லா இடங்களிலும் பரவவும் ஜெபிப்போம்.
- இயற்கைப் பேரழிவுகள், வறுமை, தீவிரவாதம் இவற்றின் அழிவுகளுக்கு தேசங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
- **நமது தேசத்தில் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக பாரத்தோடு ஜெபிப்போம். சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக, சுவிசேஷத்திற்கு தடை செய்யாத, மதவாதம் மற்றும் இனவாதத்தால் நாட்டின் மக்களை பிரித்தாளத நல்ல அரசு அமைந்திடவும், அனைத்து மக்களும் பணத்திற்காக வாக்குகளை செலுத்திடாமல் சுயமாக சிந்தித்து தங்கள் வாக்குகளை செலுத்தவும் அனைவரும் பாரத்தோடு ஜெபிப்போம்.**

**ஜெபமே ஜெயம்!**

## பெண்கள் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி - 73

## ஏப்ரல் 2019 மாத கேள்விகள்

## (யோபு 25 முதல் 35 வரை)

1. சமுத்திரத்தின் கொந்தளிப்பை அமரப்பண்ணுகிறவர் யார்?
2. தொங்க வைக்கப்பட்டிருப்பது எது?
3. யார் ஆகாரத்தினால் திருப்தியடைவதில்லை?
4. ஆபத்து வரும்போது யாருடையை கூப்பிடுதலை தேவன் கேட்பதில்லை?
5. எது ஞானம் என யோபு குறிப்பிடுகிறார்?
6. முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது எது?
7. என் நாட்களைப் பெருகப்பண்ணுவேன் என்றது யார்?
8. இருளை கடந்துபோகும் வெளிச்சத்தை அருளினது யார்?
9. யாரை காஞ்சொறிகளின் கீழ் ஒதுங்கினவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது?
10. தாங்கள் கெடுத்த வழியில் புரண்டுவருகிறவர்கள் யார்?
11. எது தோஷம்?
12. தன் அக்கிரமத்தை ஒளித்து வைத்தது யார்?
13. இச்சகம் பேசுவோருக்கு என்ன சம்பவிக்கும்?
14. எலிகூ யாருடைய குமாரன்? அவனது மறுபெயர் என்ன?
15. ஜீவனை பட்டயவெட்டுக்கு தப்புவிக்கிறவர் யார்?

16. மீட்கும்பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பது யார்?
17. தேவனுக்கு தூரமாயிருப்பது எது?
18. புத்தியுள்ள மனுஷர் என் பட்சமாய் பேசுவார்கள் என்றது யார்?
19. பாவத்தினால் யாருக்கு நஷ்டம் உண்டாகும்?
20. தேவன் எதற்கு செவிகொடுப்பதில்லை?

## மார்ச் 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

1. பரிதானம் வாங்கினவர்கள் - யோபு 15:34,35
2. துன்மார்க்கன் - யோபு 15:20-30
3. எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் - யோபு 15:1, 18:1, 20:1
4. இரட்டுச்சேலையை – யோபு 16:15
5. ஜனங்களிலே யோபு பழமொழியாக வைக்கப்பட்டதற்காக – யோபு 16:6-8
6. நம்பிக்கை பாதாளத்தின் காவலுக்குள் இறங்கும்போது – யோபு 17:16
7. துன்மார்க்கன் - யோபு 18:5-18
8. கேடு – யோபு 18:12,13
9. தேவனை – யோபு 19:6
10. மீட்பர் உயிரோடிருக்கிறார், கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்பதை – யோபு 19:25
11. துன்மார்க்கன் - யோபு 20:25
12. மாயக்காரரின் சந்தோஷம் - யோபு 20:4
13. துன்மார்க்க - யோபு 21:13
14. குறையற்ற பெலனுள்ளவனாய் சாகிறவனையும், ஒருநாள்கூட சந்தோஷத்தோடே சாப்பிடாமல் மனக்கிலேசத்தோடு சாகிறவனையும் - யோபு 21:23-26
15. அக்கிரம மாந்தர் - யோபு 22:15
16. சர்வ வல்லவரிடத்தில் மனந்திரும்பி அக்கிரமத்தை கூடாரத்துக்கு தூரமாக்கினால் - யோபு 22:23-27
17. தேவனுடைய வாயின் வார்த்தைகளை – யோபு 23:12
18. தேவனோடே – யோபு 22:17, 23:7
19. பாதாளம் - யோபு 24:19
20. பாவிகள் - யோபு 24:19-24

## மார்ச் 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Eban Silvia Ennesar | Mrs. Menaka David | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Nisha Rajan | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Gracelin Melba Sujin | Mrs. Percy Jean | Mrs. Shiney Johan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Juslin Jaslin | Mrs. Regin Justa Vinolin | |

## ஆண்கள் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி - 59

## ஏப்ரல் 2019 மாத கேள்விகள்

### (2இராஜாக்கள் 8 முதல் 2இராஜாக்கள் 17 வரை)

1. எலியாவை ஆசகேல் எங்கு சந்தித்தார்?
2. ராமோத் எங்குள்ளது?
3. யெகூ என் பட்சத்தில் இருக்கிறது யார் யார் என எங்கு வைத்து கேட்டான்?
4. யோராம் வியாதிப்பட்டு எங்கிருந்தான்?
5. பாகாலின் பணிவிடைக்காரரை வெட்டிப்போட்டது யார்?
6. ஆட்டுமயிர் கத்தரிக்கிற மேய்ப்பர்களின் ஊர் எங்கிருந்தது?
7. அத்தாலியாளை எப்படி கொன்றுபோட்டார்கள்?
8. யோவாஸை ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணினது யார்?
9. பாவ பிராயச்சித்தப்பணம் யாரைச் சேர்ந்தது?
10. காத்தூரின் மேல் யுத்தம்பண்ணி அதைப்பிடித்தது யார்?
11. கர்த்தருடைய சமூகத்தை நோக்கி பிரார்த்தித்த ராஜா யார்?
12. கர்த்தர் யாரை நினைத்தருளினார்?
13. ஏலாதைக் கட்டினவன் யார்?
14. ஏதோமியரில் பதினாயிரம்பேர் எங்குவைத்து மடங்கடிக்கப்பட்டனர்?
15. ஆபேலின் மற்றொரு பெயர் என்ன?
16. பெக்கா யாருடைய சேர்வைக்காரன்?
17. ஓய்வுநாளின் மண்டபம் எங்கு கட்டப்பட்டிருந்தது?
18. ரேத்சீனை கொன்றுபோட்டது யார்?
19. யாக்கோபின் புத்திரருக்கு கர்த்தர் இட்ட பெயர் என்ன?
20. நரகலான விக்கிரகங்களை சேவித்து வந்தவர்கள் யார்?

### மார்ச் 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

1. 33 பேர் - 1இரா. 20:16
2. இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப் - 1இரா. 20:31-33
3. நாபோத்தின் திராட்சை தோட்டத்தில் - 1இரா. 21:18
4. யெஸ்ரயேல் - 1இரா. 21:17
5. யோசபாத் - 1இரா. 22:42
6. ஆமோன் - 1இரா. 22:16
7. சமாரியா – 2இரா. 1:2
8. மூன்றாம் தலைவன் - 2இரா. 1:13
9. எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் - 2இரா. 2:5
10. நீரூற்றண்டையில் - 2இரா. 2:21
11. இஸ்ரவேலின் பாளையத்திற்கு – 2இரா. 3:24

12. மோவாபியருக்கு – 2இரா. 3:22
13. பேய்க்கொம்மட்டிக்கொடியின் காய்கள் - 2இரா. 4:39
14. தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுடைய மனைவியான ஒரு ஸ்திரீ – 2இரா. 4:1-4
15. நாகமான் - 2இரா. 5:9
16. சீரியாவின் ராஜா – 2இரா. 5:5
17. இஸ்ரவேலின் ராஜா – 2இரா. 6:10
18. தோத்தானில் எலிசா இருந்த பகுதியிலுள்ள மலை – 2இரா. 6:17
19. வாசல் காக்கிற மற்றவர்கள் - 2இரா. 7:11
20. சீரியரின் இராணுவத்தினர் - 2இரா. 7:6,7

**மார்ச் 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Kanagavel |
| Mr. Anu | Mr. Prince J. P. |
| Mr. David Prabhakaran | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin | Mr. Ramesh |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Vinolin |
| Mr. Johan Pratheep | |

# வாழ்த்துகிறோம்!

எட்டு ஆண்டுகளை சிறப்பாக நிறைவு செய்து ஒன்பதாம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் "**பாலைவன மன்னா**" தொடர்ந்து சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்!

# நன்றி!!

**பாலைவன மன்னா**–விற்கு தங்கள் படைப்புகளையும் உதவிகளையும் தந்தவர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

## பெப்ரவரி 2019 மாத வரவு செலவு விபரம்

## Income & Expenditure for the Month Feb -2019

| | | | | |
|---|---|---|---|---|
| Opening Bank Balance as per book on 01-02-2019 | | | | 7,153.485 |
| Opening Cash Balance as per book on 01-02-2019 | | | | 87.297 |
| | | | | **7,240.782** |
| **Expenditure Details** | | **Amount** | **Receipts details** | **Amount** |
| Pastor salary | | 420.000 | Arunodaya offering | 20.000 |
| Parsonage rent | | 270.000 | All night prayer | 20.100 |
| Provident fund | | 46.000 | Men's Fellowship | 13.800 |
| Parsonage cleaning exps | | 15.000 | Women's Fellowship | 10.700 |
| Land Line Bill | | 19.309 | Women's Fellowship sale | 191.600 |
| Gsm Bill | | 8.100 | Fasting Prayer Offering | 25.700 |
| Toyota Corolla 1.6 - EMI - 10 | | 149.000 | Sunday Class offering | 85.500 |
| Fuel Exps | | 18.600 | Weekly Offering | 344.600 |
| Photo copy & stationary | | 24.250 | Sponsorship | 117.000 |
| **Refreshment exps** | | | Thanks giving offering | 471.000 |
| Fasting prayer | 32.000 | | Pastor Fund | 10.000 |
| Weekly Refreshments | 18.775 | 50.775 | Missionary offering | 486.500 |
| Transport | | 74.000 | Birthday offering | 31.000 |
| Bank Charges | | 3.000 | Wedding day offering | 6.000 |
| Momento | | 10.000 | Subscription | 88.000 |
| Preachers gift - Elizabeth Rajkumar | | 20.000 | Christmas tree collection | 10.000 |
| | | | Harvest collection - 2018 | 5.000 |
| | | | Retreat Collection | 6.000 |
| | | | Special offering | 42.000 |
| | | | Church Car - Donations | 230.000 |
| | | | VBS Sponsors - 2018 | 120.000 |
| **Total Exps** | | **1,128.034** | **Total Incomes** | **2,334.500** |
| Surplus (Income - Expenses) | | 1,206.466 | | |
| Opening Bank Balance as per book on 01-02-19 | 7,153.485 | | | |
| Cheque Payment | (753.000) | | | |
| Bank balance after cheque deposit | 6,400.485 | | | |
| Feb Month Cash deposited in bank | 1,935.200 | | | |
| Closing bank balance - Feb | | 8,335.685 | | |
| Closing Cash | | 111.563 | | |
| Total fund | | 8,447.248 | | |
| Welfare fund from monthly income | | 120.647 | | |
| Accumulated Welfare fund | | 180.040 | | |

## Birthday Celebrants – April 2019

| | |
|---|---|
| 04th April | Mr. Nickson, S/o Mr. David Sundar Sing |
| 04th April | Mrs. Selva Angel, W/o Mr. Mohan Babu |
| 04th April | Mr. Dhinakaran |
| 05th April | Mrs. M. Latha, W/o Mr. George |
| 05th April | Miss. Ancio Broos, D/o Mr. Jegan Broose |
| 07th April | Mr. T. Raju |
| 08th April | Master. Daulton Ziegan Isaac, S/o Mr. Isaac Solomon |
| 09th April | Mr. P. Bino Vetha Raja Singh |
| 10th April | Mrs. Eunice Beulah Suganthi, W/o Mr. Isaac Solomon |
| 10th April | Mrs. Jancy Deepa, W/o Mr. Victor Johnslin |
| 10th April | Mr. M. Ramesh |
| 11th April | Master. Joshua, S/o Mr. T. Raju |
| 11th April | Mrs. Vijayakumari, W/o Mr. Devaraj |
| 11th April | Miss. Anlin Mathney, D/o Mr. Anto Kingston |
| 11th April | Mr. M. Berkins |
| 12th April | Mr. Prem Vijins Gabriel |
| 12th April | Mrs. Reni Thresia, W/o Mr. C. A. Vinu |
| 13th April | Mr. J. Selvamani |
| 14th April | Miss. Jeena Jones, D/o Mr. Jones |
| 14th April | Master. Kevin John, S/o Mr. A. Rajasingh |
| 14th April | Mr. Ashok Rajasekaran |
| 17th April | Mr. Livingston |
| 18th April | Mr. C.A. vinu |
| 18th April | Mr. Michael |
| 19th April | Master. Danny J Sathya, S/o Mr. Jerry Sathya |
| 19th April | Mr. S. Siva Kumar |
| 20th April | Mrs. Sobiya Kumari, W/o Mr. Venil Singh |
| 21st April | Mrs. Felsi Rani, W/o Mr. John Jacob |
| 23rd April | Mrs. Gracelin Rani, W/o Mr. Bensam |
| 23rd April | Mrs. Paulin Shabila, W/o Mr. Gnanadhas |
| 23rd April | Master. V. J. Jalin Lino, D/o Mr. Victor Johnslin |
| 24th April | Mr. Nelson |
| 25th April | Master. Priston David, S/o Mr. David Prabhakaran |
| 25th April | Miss. V.J. Shaolin Lina D/o Mr. Victor Johnslin |
| 26th April | Mr. R. Sunil |
| 27th April | Miss. Arifny Cratford Jenkin, D/o Mr. Jenkin Raj |
| 30th April | Mrs. Shakina, W/o Mr. Prem Vijins |
| 30th April | Mrs. Bindhu, W/o Mr. Robertdhas |

## Wedding day Anniversaries – April 2019

| | |
|---|---|
| 02nd April | Mr. Broosewelt & Mrs. Nisha |
| 03rd April | Mr. Jose Chandra Bose & Mrs. Jeya Selvi |
| 06th April | Mr. C. Stalin & Mrs. Sheeba |
| 06th April | Mr. C.A. Vinu & Mrs. Reni Thresia |
| 13th April | Mr. Mohan Babu & Mrs. Selva Angel |
| 16th April | Mr. Prem Meshach & Mrs. Shiney Vasica |
| 22nd April | Mr. J. Gnanadhas & Mrs. Paulin Shabila |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-04-2019 | திங்கள் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 |
| 04-04-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 |
| 05-04-2019 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 12-04-2019 | வெள்ளி – **குருத்தோலை தின ஆராதனை**<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 13-04-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30 – 1:00 |
| 18-04-2019 | **வியாகுல வியாழன் திருவிருந்து ஆராதனை**<br>இடம் : மார்த்தோமா ஹால் / இரவு 8:30 – 10:00 |
| 19-04-2019 | **புனித வெள்ளி ஆராதனை**<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 21-04-2019 | **ஞாயிறு – உயிர்த்தெழுதல் பண்டிகை ஆராதனை**<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 4:30 – 6:00 |
| 26-04-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |
| 01-05-2019 | புதன் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 |
| 02-05-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 |
| 03-05-2019 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |

# அனுதின மன்னா –ஏப்ரல் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1 | திங்கள் | சங்கீதம் 119:1-16 | சங்கீதம் 119:1 | 2 சாமு. 14-15அதிகாரங்கள் |
| ஏப்ரல் 2 | செவ்வாய் | 2 தீமோத். 2:1-19 | 2 தீமோத். 2:15 | 2 சாமு. 16-18 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 3 | புதன் | யாக்கோபு 1:16-27 | யாக்கோபு 1:22 | 2 சாமு. 19-20 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 4 | வியாழன் | ஏசாயா 55:1-13 | ஏசாயா 55:11 | 2 சாமு. 21-22 அதிகாரங்கள் |
| **ஏப்ரல் 5** | **வெள்ளி** | **மத்தேயு 25:1-13** | மத்தேயு 25:1 | **2 சாமு. 23-24 அதிகாரங்கள்** |
| ஏப்ரல் 6 | சனி | மத்தேயு 5:1-17 | மத்தேயு 5:10 | 1இராஜா. 1-2 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 7 | ஞாயிறு | எண்ணாகமம் 24:1-25 | எண். 24:5 | 1இராஜா. 3-5 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 8 | திங்கள் | ரோமர் 10:10-21 | ரோமர் 10:15 | 1இராஜா. 6-7 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 9 | செவ்வாய் | உன்னத. 4:7-16 | உன்னத. 4:10 | 1இராஜா. 8-9 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 10 | புதன் | சங்கீதம் 133 | சங்கீதம் 133:1 | 1இராஜா. 10-12 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 11 | வியாழன் | லூக்கா 12:22-31 | லூக்கா 12:24 | 1இராஜா. 13-15 அதிகாரங்கள் |
| **ஏப்ரல் 12** | **வெள்ளி** | **சங்கீதம் 84** | **சங்கீதம் 84:10** | **1இராஜா. 16-18 அதிகாரங்கள்** |
| ஏப்ரல் 13 | சனி | ஏசாயா 52:1-15 | ஏசாயா 52:7 | 1இராஜா. 19:20 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 14 | ஞாயிறு | வெளி. 2:1-7 | வெளி. 2:4 | 1இராஜா. 21-22 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 15 | திங்கள் | வெளி. 2:8-11 | வெளி. 2:10 | 2இராஜா. 1-3 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 16 | செவ்வாய் | வெளி. 2:12-17 | வெளி. 2:16 | 2இராஜா. 4-5 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 17 | புதன் | வெளி. 2:18-29 | வெளி. 2:26 | 2இராஜா. 6-8 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 18 | வியாழன் | வெளி. 3:1-6 | வெளி. 3:3 | 2இராஜா. 9-11 அதிகாரங்கள் |
| **ஏப்ரல் 19** | **வெள்ளி** | **வெளி. 3:7-13** | **வெளி. 3:8** | **2இராஜா. 12-14 அதிகாரங்கள்** |
| ஏப்ரல் 20 | சனி | வெளி. 3:14-22 | வெளி. 3:19 | 2இராஜா. 15-17 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 21 | ஞாயிறு | 2கொரி. 8:1-13 | 2கொரி. 8:2 | 2இராஜா. 18-20 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 22 | திங்கள் | மல்கியா 3:1-11 | மல்கியா 3:10 | 2இராஜா. 21-23 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 23 | செவ்வாய் | மாற்கு 12:35-44 | மாற்கு 12:43 | 2இராஜா. 24-25 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 24 | புதன் | 2கொரி. 9:1-15 | 2கொரி. 9:7 | 1நாளா. 1-2 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 25 | வியாழன் | ஆதியாகமம் 4:1-16 | ஆதி. 4:4 | 1நாளா. 3-5 அதிகாரங்கள் |
| **ஏப்ரல் 26** | **வெள்ளி** | **மத்தேயு 5:18-26** | **மத்தேயு 5:24** | **1நாளா. 6-7 அதிகாரங்கள்** |
| ஏப்ரல் 27 | சனி | 1நாளா. 29:10-19 | 1நாளா. 29:14 | 1நாளா. 8-10 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 28 | ஞாயிறு | 1நாளா. 16:23-36 | 1நாளா. 16:29 | 1நாளா. 11-13 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 29 | திங்கள் | 1கொரி. 16:1-8 | 1கொரி. 16:1 | 1நாளா. 14-16 அதிகாரங்கள் |
| ஏப்ரல் 30 | செவ்வாய் | 1சாமு. 2:12-17 | 1சாமு. 2:17 | 1நாளா. 17-20 அதிகாரங்கள் |
| மே 1 | புதன் | லூக்கா 6:30-38 | லூக்கா 6:38 | 1நாளா. 21-23 அதிகாரங்கள் |
| மே 2 | வியாழன் | மத்தேயு 25:31-46 | மத்தேயு 25:40 | 1நாளா. 24-26 அதிகாரங்கள் |
| மே 3 | **வெள்ளி** | மத்தேயு 6:1-4 | மத்தேயு 6:1 | 1நாளா. 27-29 அதிகாரங்கள் |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. K. Gladston**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**